# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.10.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

1. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 39 மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.சீதா அவர்கள் டி.வி.எஸ். நகர் விநாயகர் கோவில் முன்பு தெருவிளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மிகுந்த அச்சத்துடன் வருவதால் பொது மக்கள் நலன்கருதி கோவில் அமைந்துள்ள பகுதிகளில் நான்கு மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து அதில் 20W LED நான்கு எண்ணம் அமைத்திட, மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.75,000/- (ரூ.எழுபத்தைந்தாயிரம் மட்டும்)க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பகுதியில் நான்கு மின் விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 39 மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.சீதா அவர்கள் டி.வி.எஸ்.நகர் விநாயகர் கோவில் முன்பு தெருவிளக்கு வசதி இல்லதாததால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பகுதியில் உள்ள நான்கு மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 20W LED நான்கு எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.75,000/- (ரூ.எழுபத்தைந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/3273/2022 (பா.வார்டு))

**தீர்மானம் எண்: 156 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

2. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 37 சீனிவாசகம் நகர் 'A' காலனி பகுதியில் தெரு விளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் பொது மக்களும் சிறு குழந்தைகளும் நடமாடுவதற்கு அச்சமாக இருப்பதால் தெரு விளக்கு அமைத்து தரும்படி கேட்டு வரப்பெற்ற மனுவின் அடிப்படையில் மேற்படி இடத்தில் இரண்டு மின் கம்பங்கள் உள்ளன தெருவிளக்கு லைன் மட்டும் இல்லை எனவே பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்கு லைன் அமைத்து 40W LED இரண்டு எண்ணம் அமைத்திடவும், மின்வாரிய பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.30,000/- (ரூ.முப்பதாயிரம் மட்டும்)க்கு

நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பகுதியில் இரண்டு மின் விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 37ல் சீனிவாசகம் நகர் 'A' காலனி பகுதி பொதுமக்கள் நலன் கருதியும் ஏற்கனவே மேற்படி பகுதியில் இரண்டு மின்கம்பங்கள் உள்ளது ஆனால் தெருவிளக்கு லைன் இல்லாததால் தெருவிளக்கு லைன் அமைத்து 40W LED இரண்டு எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.30,000/-க்கு (ரூபாய் முப்பதாயிரம்) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1/2974/2022 (பா.வா)

**தீர்மானம் எண்: 157 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 39 வேலவர் காலனி பார்க் அருகில் மற்றும் விரிவாக்க பகுதி வடகடைசி தெருவில் தெருவிளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் வர மிகுந்த அச்சத்துடன் வருவதால் பொது மக்கள் நலன்கருதி மேற்படி பகுதிகளில் 13 மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து அதில் 20W LED 13 எண்ணம் அமைத்திட, மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பகுதியில் 13 மின் விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 39 வேலவர் காலனி பார்க் அருகில் மற்றும் விரிவாக்க பகுதி வடகடைசி தெருவில் தெருவிளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் வர மிகுந்த அச்சத்துடன் வருவதால் பொது மக்கள் நலன்கருதி மேற்படி பகுதியில் 13 மின்கம்பங்கள் உள்ளது ஆனால் தெருவிளக்கு லைன் இல்லாததால் தெருவிளக்கு லைன் அமைத்து 20W LED 13 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/2575/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 158 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

4. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்ஆ.ஜி.ர் பேரூந்து நிலையத்தில் Indial Payment Limited நிறுவனம் மூலம் ATM அமைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுஅதன்படி பொது மக்களின் நலன் கருதி மேற்படி . பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி விளம்பர பலகை அலுவலகத்திற்கு ) அருகே4 ½ x 8) = 36 சதுரடி அளவில் இடம் ஒதுக்கீடு செய்யவும், ஒரு சதுரடிக்கு ரூ .137/வீதம் மொத்தம -ௗ ரூ .4932/- மாத வாடகை நிர்ணயம் செய்வது குறித்தும், வைப்புத் தொகையாக ரூ .1,00,000/மற்றும் கூடுதல் - .வைப்புத் தொகையாக ரூ1,00,000/நி -ர்ணயம் செய்வது குறித்தும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் .

**அலுவலகக்குறிப்பு** :

பொது மக்களின் நலன் கருதி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்ஆ.ஜி.ர் பேரூந்து நிலையத்தில் Indial Payment Limited நிறுவனம் மூலம் ATM அமைக்க தொலைக்காட்சி விளம்பர பலகை அலுவலகத்திற்கு அருகே )4 ½ X 8) = 36 சதுரடி அளவில் இடம் ஒதுக்கீடு செய்யவும், ஒரு சதுரடிக்கு ரூ .137/ .வீதம் மொத்தம் ரூ -4932/ -மாத வாடகை நிர்ணயம் செய்யவும், வைப்புத் தொகையாக ரூ .1,00,000/மற்றும் - .கூடுதல் வைப்புத் தொகையாக ரூ1,00,000/நி -ர்ணயம் செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(மேபா அ.1/ 3675 /2022)

**தீர்மானம் எண்: 159 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

5. திருநெல்வேலி மாநகராட்சியில் நாளொன்றிற்கு சுமார் 200 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. அதில் சுமார்10 மெட்ரிக் டன் அளவிலான கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சிக்கழிவுகள், மாட்டிறைச்சிக்கழிவுகள் மற்றும் மீன் இறைச்சிக்கழிவுகள் உள்ளடங்கும். இவை அனைத்தும் தரம் பிரிக்கப்படாமல் ஏனைய திடக்கழிவுகளுடன் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழலை பெரிதும் மாசு படுத்துகின்றது. மேற்கூறிய கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சிக்கழிவுகள், மாட்டிறைச்சிக்கழிவுகள் மற்றும் மீன் இறைச்சிக்கழிவுகள் ஆகியவை சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டத்தில் மருத்துவக்கழிவுகளின் இரண்டாம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள கழிவுகளை

மருத்துவக்கழிவுகளை போல் தனியாக தரம் பிரிக்கப்பட்ட நிலையில் சேகரம் செய்து சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் அறிவியல் சார் முறையில் கழிவு செய்திடல் வேண்டும். தற்சமயம் இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சிக்கழிவுகள், மாட்டிறைச்சிக்கழிவுகள் மற்றும் மீன் இறைச்சிக் கழிவுகள் ஆகியவற்றினை மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினரால் **(Guidelines of Central Pollution Control Board)** வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி அறிவியல் சார் முறையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இம்மாநகராட்சி உள்ளது.

எனவே இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சிக்கழிவுகள், மாட்டிறைச்சிக் கழிவுகள் மற்றும் மீன் இறைச்சிக்கழிவுகள் ஆகியவற்றினை அறிவியல் சார் முறையில் கழிவு செய்ய நாளொன்றிற்கு 20 மெட்ரிக் டன் கொள்ளளவிலான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ரெண்டரிங் ஆலையினை **(Rendering Plant)** இராமாயன்பட்டி குப்பைக்கிடங்கு வளாகத்தில் தனியார் பங்களிப்புடன் **(Public Private Partnership Mode)** நிறுவி அதனை பத்தாண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவுற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம், **1998** மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவுற்ற ஒப்பந்தபுள்ளி விதிகள், **2000** ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி விருப்பட்கேட்பறிக்கை **(Expression of Interest)** முறையிலோ அல்லது முன் மொழிவுகளுக்கான கோரிக்கை **(Request for Proposals)** முறையிலோ ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்க கடந்த 14.09.2022 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்ட முன் அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். இ2/ 5677 / 2022

**அலுவலகக்குறிப்பு** : 1) இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சிக்கழிவுகள், மாட்டிறைச்சிக் கழிவுகள் மற்றும் மீன் இறைச்சிக்கழிவுகள் ஆகியவற்றினை நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 20 மெட்ரிக் டன் கொள்ளளவிலான ரெண்டரிங் ஆலையினை

**(Rendering Plant)** இராமாயன்பட்டி குப்பைக்கிடங்கு வளாகத்தில் தனியார் பங்களிப்புடன் **(Public Private Partnership Mode)** நிறுவி அதனை பத்தாண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவுற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம், **1998** மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவுற்ற ஒப்பந்தபுள்ளி விதிகள், **2000** ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழி காட்டுதல்களை பின்பற்றி விருப்பட் கேட்பறிக்கை **(Expression of Interest)** முறையில் ஒப்பந்தப்புள்ளிகள்கோரி பணிமேற்கொள்ளலாம்

2) மேற்கூறிய திட்டப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்க கடந்த 14.09.2022 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்ட முன் அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்கலாம்

**தீர்மானம் எண்: 160 அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அங்கீகரிக்கப்பட்டது**

---

6. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சமூக நலத்துறை மானிய கோரிக்கையின் போது அரசு பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயின்று வரும் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 07.05.2022 அன்று அறிவிக்கப்பட்டதினை தொடர்ந்து, இம்மாநகராட்சி பகுதியில் வார்டு எண்.28 பகுதிக்குட்பட்ட பாரதியார் உயர்நிலைப்பள்ளி வளாகம், வார்டு எண்.29 மேலவீரராகவபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி வளாகம் மற்றும் வார்டு எண்.44 பகுதிக்குட்பட்ட மேலப்பாளையம் மண்டல அலுவலகம் பின்புறம் ஆகிய மூன்று இடங்களில் ஒருங்கிணைந்த சமையற் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, 22 பள்ளிகளில் பயின்று வரும் 2250 பள்ளி மாணவர்களுக்கு டம்ளர்கள் மற்றும் தட்டுகள் தேவைப்படுவதால் அவற்றினை கொள்முதல் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | டம்ளர் ஒன்றுக்கான விலை | தட்டு ஒன்றுக்கான விலை |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.பொன்னையா நாடார் & சன்ஸ், திருநெல்வேலி | 44/- | 105/- |
| 2 | மெசர்ஸ்.வேலாயுத நாடார் ஸ்டோர்ஸ், திருநெல்வேலி | 48/- | 110/- |
| 3 | மெசர்ஸ். பொன்குக், திருநெல்வேலி | 49/- | 108/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் மெசர்ஸ்.பொன்னையா நாடார் & சன்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளது. அதன்படி 2250 எண்ணம் டம்ளருக்கான தொகை ரூ.99000/- மற்றும் 2250 எண்ணம் தட்டுகளுக்கான தொகை ரூ.2,36,250/- ஆக மொத்தம் ரூ.3,35,250/-க்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.பொன்னையா நாடார் & சன்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தினை விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை ஆணை வழங்கப்பட்டமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 07.05.2022ம் தேதிய அறிவிப்பின்படி, இம்மாநகராட்சிக்குட்பட்ட 22 பள்ளிகளில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட, அப்பள்ளிகளில் பயின்று வரும் குழந்தைகளுக்கு காலை உணவினை வழங்கிடும் பொருட்டு 2250 எண்ணம் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் ஆகியவை தேவைப்படுவதால், அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.பொன்னையா நாடார் & சன்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை ஆணை வழங்கப்பட்டமைக்கும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.3,35,250/-க்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 161 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

7. திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளை திறந்து வைப்பதற்கும் மற்றும் அரசு விழாவாக 08.09.2022 அன்று பாளை அரசு மருத்துவ கல்லூரி மைதானத்தில் நடைபெறும் விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தர இருப்பதால், அரசு பல்நோக்கு மருத்துவமனை சாலையில் இருந்து விழா மேடை வரையுள்ள வழிப்பாதையில் தார்ச்சாலை அமைக்கும் பணிகளை

மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.28.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1. திரு.முகம்மது காசிம்,
   11.பவலர் தெரு, கயத்தார் : மதிப்பீட்டை விட 1.50% அதிகமாக.
2. திரு.டி.பாலசுப்பிரமணியன்,
   214/1.பூந்தோட்டத் தெரு,
   சங்கர்நகர். : மதிப்பீட்டை விட 0.50% குறைவாக
3. திரு.முகம்மது & சன்ஸ்,
   கயத்தாறு. : மதிப்பீட்டை விட 1% அதிகமாக

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் திரு.டி.பாலசுப்பிரமணியன் என்பவரின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விடவும், மதிப்பீட்டை விடவும் 0.50% குறைவாக உள்ளதால், அன்னாருடைய விலைப்புள்ளியினை ஏற்று மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.28.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.பாலசுப்பிரமணியன் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை ஆணை வழங்கப்பட்டு தார்ச்சாலை அமைக்கும் பணியானது செய்து முடிக்கப்பட்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பின்னேற்பிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளை திறந்து வைப்பதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வருகையினை முன்னிட்டு, அரசு விழா நடைபெறும் இடத்தில் அரசு பல்நோக்கு மருத்துவமனை சாலையில் இருந்து விழா மேடை வரையுள்ள வழிப்பாதையில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.28.50 இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டை விட 0.50% குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.பாலசுப்பிரமணியன் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(மதிப்பீடு எண்.114/2022-23)

**தீர்மானம் எண்: 162 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

8. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்.20 எம்.என்.பி.சன்னதி தெருவில் உள்ள மாநகராட்சி ராணி அண்ணா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு ரூ.91.70 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.91 நாள் 24.08.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 26/2022-23ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 08.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 27.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறை அல்லாத இரு உறை முறையில் மெசர்ஸ்.R.R.Builders மற்றும் மெசர்ஸ்.George Engineering Enterprises ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மெசர்ஸ்.R.R.Builders மற்றும் மெசர்ஸ்.George Engineering Enterprises ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளி அட்டவணைகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவீகிதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்.20 எம்.என்.பி.சன்னதி தெருவில் உள்ள மாநகராட்சி ராணி அண்ணா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | மெசர்ஸ். R.R.Builders | 90,05,666/- | 99,12,850/- | மதிப்பீட்டை விட 10.07% அதிகம் |
| 2 | | மெசர்ஸ்.George Engineering Enterprises | | 1,03,57,284/- | மதிப்பீட்டை விட 15.01% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.99,12,850/- ஆனது மதிப்பீட்டை விட 10.07% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.10.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 10.07% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 0.05% குறைவான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.90,01,163/- ஆனது

மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்.20 எம்.என்.பி.சன்னதி தெருவில் உள்ள மாநகராட்சி ராணி அண்ணா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.90,01,163/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 26/2022-23)**

## தீர்மானம் எண்: 163 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

9. திருநெல்வேலி மாநகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் காவலர் குடியிருப்பில் தற்காலிக கடைகள் 316 எண்ணங்கள் அமைத்தல் பணிக்கு ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண்.83 நாள்.29.07.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 25/2022-23 -ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழில் 24.08.2022 அன்றும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 25.08.2022 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 12.09.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (1) மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 14.09.2022-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் (1) மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் (1)மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய ஒப்பந்தக்காரர்களின் விலை அட்டவணைகள் 19.09.2022ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ். G.V.Constructions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் காவலர் குடியிருப்பில் தற்காலிக கடைகள் 316 எண்ணங்கள் அமைத்தல் | ரூ. 97,78,793/- | ரூ. 1,03,65,601/- | ரூ. 1,05,67,517/- |
| | | | 6.00% மதிப்பீட்டை விட அதிகம் | 8.07% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,03,65,601/- ஆனது மதிப்பீட்டை விட 6.00% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.10.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.00% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 0.10% குறைவான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது இப்பணியானது 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 UNTIED GRANTன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ந.க.எண்.18704/2022/ சிஎப்சி-1 நாள்: 12.10.22ன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.97,69,014/- ஆனது மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-23 ம் ஆண்டிற்கான UNTIED GRANT-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து கீழ் பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் காவலர் குடியிருப்பில் தற்காலிக கடைகள் 316 எண்ணங்கள் அமைத்தல் பணிக்கு 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி

கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.97,69,014/- ஆனது மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

**(ஒ.பு.அ.எண்.25/2022-23)**

**தீர்மானம் எண்: 164 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

10. திருநெல்வேலி மாநகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் ஜவஹர் திடலில் தற்காலிக கடைகள் 178 எண்ணங்கள் அமைத்தல் பணிக்கு ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண்.82 நாள்.29.07.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 25/2022-23 -ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழில் 24.08.2022 அன்றும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 25.08.2022 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 12.09.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (1) மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 14.09.2022-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் (1) மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் (1)மெசர்ஸ். G.V.Constructions மற்றும் (2)மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions ஆகிய ஒப்பந்தக்காரர்களின் விலை அட்டவணைகள் 19.09.2022ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ். G.V.Constructions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ். Sri Naachimar Engineering Constructions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் ஜவஹர் திடலில் தற்காலிக கடைகள் 178 எண்ணங்கள் அமைத்தல் | ரூ. 97,82,360/- | ரூ. 1,03,69,322/- | ரூ. 1,05,68,543/- |
| | | | 6.00% மதிப்பீட்டை விட அதிகம் | 8.04% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,03,69,322/- ஆனது மதிப்பீட்டை விட 6.00% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.10.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.00% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 0.10% குறைவான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது இப்பணியானது 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 UNTIED GRANTன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ந.க.எண்.18704/2022/ சிஎப்சி-1 நாள்: 12.10.22ன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.97,72,578/- ஆனது மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-23 ம் ஆண்டிற்கான UNTIED GRANT கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்.9ல் ஜவஹர் திடலில் தற்காலிக கடைகள் 178 எண்ணங்கள் அமைத்தல் பணிக்கு 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.G.V.Constructions ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.97,72,578/- ஆனது மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

**(ஒ.பு.அ.எண்.25/2022-23)**

**தீர்மானம் எண்: 165 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

11. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 19, ரஹ்மத் நகர், பேட்டை கருங்காடு ரோடு, கோல்டன் சிட்டி பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மாமன்ற உறுப்பினர் கோரிக்கை கொடுத்ததின்பேரில் ரஹ்மத் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 24 எண்ணம், புதிய மின்கம்பம் நிறுவி 20 வாட்ஸ் LED ஒரு எண்ணம், கருங்காடு ரோடு கோல்டன் சிட்டி பகுதிகளில் ஏற்கனவே மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 9 எண்ணம் பொருத்துவதற்கு மின்வாரியத்தின் மூலம் தெருவிளக்கு மின் லயன் அமைக்கவும், புதிய தெரு விளக்குகள் பொருத்துவதற்கும் மின்வாரிய மதிப்பீட்டு உத்தேச கட்டணமும், புதிய தெருவிளக்குகளின் மதிப்பும் சேர்த்து உத்தேச செலவினத்தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் நலன் கருதி வார்டு எண்.19, ரஹ்மத் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 24 எண்ணம், புதிய மின்கம்பம் நிறுவி 20 வாட்ஸ் LED ஒரு எண்ணம், கருங்காடு ரோடு கோல்டன் சிட்டி பகுதிகளில் ஏற்கனவே மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 9 எண்ணம் பொருத்துவதற்கு மின்வாரியத்தின் மூலம் தெருவிளக்கு மின் லயன் அமைக்கவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/2044/2022)

**தீர்மானம் எண்: 166 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

12. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை சத்யா நகர் விரிவாக்கப் பகுதியான வ.உ.சி. நகரில் குடிசை மாற்றுவாரிய குடியிருப்பு பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க அப்பகுதி மக்கள் விண்ணப்பித்ததின் பேரில், மேற்படி பகுதி அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குடியிருப்பு பகுதியாகும். மேற்படி பகுதியில் 4 எண்ணம் புதிய மின்கம்பங்கள் தெருவிளக்கு லயனுடன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 4 எண்ணமும், ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 26 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் மதிப்பு (ரூ.3570 x 30) ரூ. 1,07,000-ம் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்களும் சேர்த்து உத்தேச தொகை ரூ. 5.00 இலட்த்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் நலன் கருதி வார்டு எண் 18, பேட்டை சத்யா நகர் விரிவாக்கப் பகுதியான வ.உ.சி. நகரில் குடிசை மாற்றுவாரிய குடியிருப்பு பகுதியில்4 எண்ணம் புதிய மின்கம்பங்கள் தெருவிளக்கு லயனுடன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 4 எண்ணமும், ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 26 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்களும் சேர்த்து உத்தேச தொகை ரூ. 5.00 இலட்த்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/1944/2022)

**தீர்மானம் எண்: 167 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

13.திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை விஸ்வநாத நகர், இரயில் நகர், சாஸ்திரி நகர், எம்.ஜி.ஆர் நகர், ஜெகஜீவன் ராம் நகர் ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்குள் அமைக்க மாமன்ற உறுப்பினா் கேட்டுக்கொண்டதின்பேரில், விஸ்வநாத நகர் பகுதியில் 7 எண்ணம் புதிய மின்கம்பம் நிறுவி தெருவிளக்கு லயன் அமைத்து 7 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்கு ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 9 எண்ணம் மொத்தம் 16 எண்ணமும், இரயில் நகர் பகுதியில் 4 எண்ணம் புதிய மின்கம்பம் நிறுவி தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 4 எண்ணம் ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 4 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் மொத்தம் 8 எண்ணமும், எம்.ஜி.ஆர் நகர், ஜெகஜீவன் ராம் நகர் பகுதியில் 2 எண்ணம் தெருவிளக்கு லயனுடன் புதிய மின்கம்பம் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 1 எண்ணம் மொத்தம் 3 எண்ணம், சாஸ்தி நகர் தீயணைப்புப் படை குடியிருப்பு பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 5 எண்ணமும் அமைக்க மின்வாரிய மதிப்பீட்டு உத்தேச கட்டணமும், புதிய தெருவிளக்குகளின் மதிப்பும் சேர்த்து உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் நலன் கருதி வார்டு எண் 18, விஸ்வநாத நகர் பகுதியில் 7 எண்ணம் புதிய மின்கம்பம் நிறுவி தெருவிளக்கு லயன் அமைத்து 7 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்கு ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்குகள் 9 எண்ணம் மொத்தம் 16 எண்ணமும், இரயில் நகர் பகுதியில் 4 எண்ணம் புதிய மின்கம்பம் நிறுவி தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED

விளக்கு 4 எண்ணம் ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 4 எண்ணம் 20 வாட்ஸ் LED விளக்குகள் மொத்தம் 8 எண்ணமும், எம்.ஜி.ஆர் நகர், ஜெகஜீவன் ராம் நகர் பகுதியில் 2 எண்ணம் தெருவிளக்கு லயனுடன் புதிய மின்கம்பம் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 1 எண்ணம் மொத்தம் 3 எண்ணம், சாஸ்தி நகர் தீயணைப்புப் படை குடியிருப்பு பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 20 வாட்ஸ் LED விளக்கு 5 எண்ணமும் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/1679/2022)

**தீர்மானம் எண்: 168 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

14. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை சுத்தமல்லி பல்க் அருகில் உள்ள சீனிவாச நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பொதுமக்கள் நலச்சங்கம் சார்பாக கேட்டுக்கொண்டதின்பேரில், மேற்படி பகுதியில் 40 அடி சாலையில் 4 எண்ணம் புதிய மின் கம்பங்கள் தெருவிளக்கு லயன் அமைத்தும், மேல்பக்கம் தெருக்களில் 4 எண்ணம் புதிய மின் கம்பங்கள் நிறுவப்பட்டும், ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து 5 எண்ணம் மொத்தம் 20 வாட்ஸ் LED தெருவிளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. 20 வாட்ஸ் LED விளக்குகளின் மதிப்பு (ரூ. 3570 x 13= 46,410 )-ம் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் சேர்த்து உத்தேச தொகை ரூ. 3.50 இலட்சம் செலவுக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் நலன் கருதி வார்டு எண் 18, பேட்டை சுத்தமல்லி பல்க் அருகில் உள்ள சீனிவாச நகர் பகுதியில் 40 அடி சாலையில் 4 எண்ணம் புதிய மின் கம்பங்கள் தெருவிளக்கு லயன் அமைத்தும், மேல்பக்கம் தெருக்களில் 4 எண்ணம் புதிய மின் கம்பங்கள் நிறுவப்பட்டும், ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து மொத்தம் 5 எண்ணம் 20 வாட்ஸ் LED தெருவிளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்களும் சேர்த்து உத்தேச தொகை ரூ. 3.50 இலட்த்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/ 2212 /2022)

**தீர்மானம் எண்: 169 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

15. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 16, பழைய பேட்டை, கிருஷ்ணபேரி பகுதியில் வணக்கத்திற்கரிய மேயர் அவர்களின் நேராய்வின்போது

அப்பகுதி பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொண்டதின்பேரில் மேற்படி பகுதியில் போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மின் கம்பம் எண். W51/68-ஐ மாற்றி அமைக்கவும், கீழ்புரம் உள்ள தெருவில் ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து புதிய 20 வாட்ஸ் LED விளக்குள் 2 எண்ணம் அமைக்கவும் தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 70000/—க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 16, பழைய பேட்டை, கிருஷ்ணபேரி போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மின் கம்பம் எண். W51/68-ஐ மாற்றி அமைக்கவும், கீழ்புரம் உள்ள தெருவில் ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்கு லயன் அமைத்து புதிய 20 வாட்ஸ் LED விளக்குள் 2 எண்ணம் அமைக்கவும் தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ.70000/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/ 2019 /2022)

**தீர்மானம் எண்: 170 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

16. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், புதிய வார்டு எண் 20, பேட்டை ஆதம் நகர் மற்றும் எம்.ஜி.பி. 3வது தெருவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க 20-வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்படி ஆதம் நகர் பகுதயில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் 12 எண்ணம் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 12 எண்ணமும், புதிய மின்கம்பங்கள் 5 எண்ணமும், தெருவிளக்கு லையனுடன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 5, ஆதம் நகர் வடபகுதியில் ஏற்கனவே உள்ள 21 மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 21 எண்ணமும், புதிய மின்கம்பம் 1 எண்ணம் தெரு விளக்கு லைன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்ககுகள் 1 எண்ணமும், Switch Controller 1 எண்ணம் மற்றும் எம்.ஜி.பி. 3வது தெருவில் ஏற்கனவே உள்ள 5 மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 5 எண்ணமும், 2 புதிய மின்கம்பம் தெருவிளக்கு லைன் அமைத்து LED விளக்குகள் 2 எண்ணமும், ஆக மொத்தம் 46 எண்ணம் தெருவிளக்கு அமைப்பதற்கும் தெருவிளக்குகளின் மதிப்பீட்டு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்த்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, மாமன்ற உறுப்பினர் கோரிக்கையை ஏற்றும், பொதுமக்களின் நலன் கருதியும் புதிய வார்டு எண் 20 பேட்டை ஆதம் நகர் மற்றும் எம்.ஜி.பி. 3வது தெரு பகுதியில் 40 வாட்ஸ் LED விளக்குகள் 46 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ 7.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்

(இ1/0641/ 2022)

**தீர்மானம் எண்: 171 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

17. திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற அவசரக்கூட்டத்தீர்மானம் எண்.15 நாள்.11.4.2022ல் மாநகராட்சி பகுதிகளில் அடங்கியுள்ள தெருக்களுக்கு சொத்துவரி விதிப்பிற்காக மண்டல மதிப்பு A, B, C என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் சில தெருக்களின் மண்டலம் மாறியுள்ளது கண்டறியப்பட்டது. இதனை திருத்தம் செய்து கட்டிடங்களுக்கு/காலிமனைக்கு உண்டான மண்டலங்கள் (A, B, C) சரி செய்து நான்கு மண்டலங்களிலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேலும் தற்போது தயார் செய்யப்பட்ட சாலைப்பதிவேட்டில் (Road Ledger) புதிய தெருக்களுக்கும் மண்டல வகை (A B C ) என நிர்ணயிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி தெருக்களுக்கான மண்டல வகைகளின் பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கான மண்டலம் வகை (A B C ) மற்றும் சாலைப்பதிவேட்டில் கண்டுள்ள புதிய தெருக்களுக்கான மண்டல வகை (A, B, C) ஆகியவற்றிற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அ1/1451/2022(மை.அ)

**தீர்மானம் எண்: 172 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

18. திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்குத் தேவையான அனைத்து பணிகள் மற்றும் தூய்மை இந்தியா இயக்கத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பணிகளில் விழிப்புணர்வு பணி மேற்கொள்ளவும், குப்பையை தரம் பிரித்து உரமாக்குவது சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர் உரமாக்குதல் (MCC)

மையத்தினை கண்காணித்து பராமரிக்கும் பணி ஆகிய பணிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். திருநெல்வேலி மாநகராட்சி பணிகளுக்கு மொத்தம் 1692 தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 1335 தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். எனவே மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு பாளையங்கோட்டை மற்றும் திருநெல்வேலி மண்டலத்திற்கு 3 நபர்கள் வீதம் ஆறு நபர்களும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 5 நபர்களும், தச்சநல்லூர் மண்டலத்திற்கு 2 நபர்களும் ஆக மொத்தம் 13 நபர்கள் கொண்ட பொருநை நண்பர்கள் சுகாதார பணிக்குழுவினை 24-09-2022 முதல் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியில் ஈடுபடுத்தியதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை M3/15043/2022 நாள்: 28-06-2022-ன்படி நாள் ஒன்றுக்கு ரூ. 411/- ஊதியமாக வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பின்னேற்புக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்குத் தேவையான அனைத்து பணிகள் மற்றும் தூய்மை இந்தியா இயக்க பணிகளில் விழிப்புணர்வு பணி மேற்கொள்ளவும், குப்பையை தரம் பிரித்து உரமாக்குவது சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர் உரமாக்குதல் (MCC) மையத்தினை கண்காணித்து பராமரிக்கும் பணி ஆகிய பணிகளுக்கு 13 பணியாளர்களை பொருநை நண்பர்கள் சுகாதார பணிக்குழு மூலம் 23-09-2022 முதல் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியில் ஈடுபடுத்தியதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 173 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

19. இம்மாநகராட்சியில் 22 எண்ணம் துவக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் 4 எண்ணம் , உயர்நிலைப்பள்ளி 1 எண்ணம் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 5 எண்ணம் ஆக மொத்தம் 32 எண்ணம் பள்ளிகள் மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ளது. பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் பள்ளிவளாகங்களில் தூய்மை பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட அரசாணையின்படி, சுகாதாரப்பணிகளை மேற்கொள்வதற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்காகும் செலவினத் தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும் கீழ்க்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

<u>G.O.(Ms)No.166 Municipal Administration and Water supply (MAIV) Department dated 23.11.2016.</u>

| வ.எண். | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் | | பள்ளி வளாகத்தில் தூய்மை பணிக்கு |
|---|---|---|---|---|
| | | கழிப்பிடம் தூய்மை பணிக்கு | | |
| 1 | ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவர்கள் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர் 1 எண்ணம் | ஆண் தூய்மை பணியாளர் 1 எண்ணம | 1 எண்ணம் |
| 2 | பெண்கள் மட்டும் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர் 2 எண்ணம் | --- | 1 எண்ணம் |

அதன்படி, இம்மாநகராட்சியில் பெண்கள் மட்டும் கல்வி பயின்று வரும் 3 எண்ணம் மேல்நிலைப்பள்ளிகள், ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவ/மாணவியர்கள் பயின்று வரும் 22 எண்ணம் ஆரம்ப பள்ளிகள், 4 எண்ணம் நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 1 எண்ணம் உயர்நிலைப்பள்ளி, 2 எண்ணம் மேல்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 32 எண்ணம் பள்ளிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்கள் தேவைப்படுகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் | | பள்ளி கட்டிடத் தூய்மை பணிக்கு ஆண் தூய்மை பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| | | கழிப்பிடம் தூய்மை பணிக்கு | | |
| 1 | **ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவர்கள் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு** | **பெண் தூய்மை பணியாளர் 1 எண்ணம்** | **ஆண் தூய்மை பணியாளர் 1 எண்ணம** | **1 எண்ணம்** |
| | **29 எண்ணம் பள்ளிகள்** | **29 நபர்கள்** | **29 நபர்கள்** | **29 நபர்கள்** |
| 2 | **பெண்கள் மட்டும் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு** | **பெண் தூய்மை பணியாளர் 2 எண்ணம்** | **---** | **1 எண்ணம்** |
| | **3 எண்ணம் பள்ளிகள்** | **6 நபர்கள்** | **....** | **3 நபர்கள்** |
| | மொத்தம் தேவைப்படும் பணியாளர்கள் | **35 பணியாளர்கள்** | **29 பணியாளர்கள்** | **32 பணியாளர்கள** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு அரசாணையின்படி மாநகராட்சி பள்ளிகள் 32 எண்ணங்களுக்கு, கழிப்பிட தூய்மை பணிக்கு 35 பெண் தூய்மைப் பணியாளர்களும், 29 ஆண் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு 32 ஆண் தூய்மை பணியாளர்கள் என ஆக மொத்தம் 96 எண்ணம் தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

மேற்படி பணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2022-23ம் ஆண்டுக்கான விலை விகித அட்டவணை பட்டியல் படி நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.436/- வீதம் ஐந்து மாத காலத்திற்கு ஆகும் செலவினத் தொகை விபரம் பின்வருமாறு:-

| No. of days | No. of Sanitary Workers | Description of work | Rate per day | Amount |
|---|---|---|---|---|
| 150 days | 100 Nos | Selection of sanitary workers to engage the school sanitation work (32 Schools) | 436/- | 6540000.00 |
| 150 days | 100 Nos | EPF - 13.36% | 58.25 | 873750.00 |
| 150 days | 100 Nos | ESI - 4.75% | 20.71 | 310650.00 |
| | | | TOTAL | 7724400.00 |
| | | | GST 18% | 1390392.00 |
| | | | Service charges 5% (Rs.65,40,000/-) | 327000.00 |
| | | | LWF 1% | 95500.00 |
| | | | Contingencies & other unforcen items | 12708.00 |
| | | | TOTAL | 95,50,000.00 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு, மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 32 எண்ணம் பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக 100 எண்ணம் தூய்மை பணியாளர்களை மேற்கொள்வதற்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.436/- வீதம் ஐந்து மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்கான EPF , ESI ஆகியவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.95.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 32 எண்ணம் பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாததால், அரசாணை G.O.(Ms)No.166 Municipal Administration and Water supply (MAIV) Department dated 23.11.2016_ல் தெரிவிக்கப்பட்டபடி, மேற்படி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக 100 எண்ணம் தூய்மை பணியாளர்களை மேற்கொள்வதற்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.436/- வீதம் ஐந்து மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்கான EPF , ESI ஆகியவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.95.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2 / 6442 /2022)

## தீர்மானம் எண்: 174 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

20. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் உரிம இனம் மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் தொலைக் காட்சி பெட்டி 4 எண்ணங்களில் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு வரும் 03.10.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதனடிப்படையில் பொது ஏலம் /

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 17.09.2022 அன்று 2 தமிழ் நாளிதழில் வெளியிடப்பட்டது. மேலும் மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கும் வைக்கப்பட்டது.

மேலப்பாளையம் மண்டலம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜீ.ஆர் பேரூந்து நிலையத்தில் தொலைக் காட்சி பெட்டி 4 எண்ணங்கள் நிறுவி விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கபப்ட்ட கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கடந்த 03.10.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி விபரம் கிழ்கண்டவாறு உள்ளது.

**ஏல விபரம்**

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை

**ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத்தொகை ரூ.1,50,000/-)**

ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு பேர் மட்டும் கலந்து கொண்டனர்

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.மா.பாலசுப்பிரமணியன் த/பெ. சு.மருதராஜன், 365, எல்.ஐ.ஜி. காலனி, ஆளவந்தான், அண்ணாநகர் மதுரை-20 | வைப்புத்தொகை ரூ.0.40இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.0.40 இலட்சத்துக்கான KVB வங்கி வரைவோலை எண221125 மற்றும் 221126 நாள்: 28.09.2022 | ரூ.1,57,600/- |
| 2 | திரு.பா.மதன்ராஜா, 365, பிளாட் எண் கீழ்தளம் எல்.ஐ.ஜி. காலனி, ஆளவந்தான், அண்ணாநகர் மதுரை-20 | வைப்புத்தொகை ரூ.0.40இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.0.40 இலட்சத்துக்கான KVB வங்கி வரைவோலை எண221127 மற்றும் 221128 நாள்: 28.09.2022 | ரூ.1,55,000 |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.மா.பாலசுப்பிரமணியன் என்பவர் ரூ.1,57,600/- என உச்ச ஏல கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.7,600/- கூடுதலாக கேட்டுள்ளார்.

எனவே திரு.மா.பாலசுப்பிரமணியன் என்பவருக்கு அன்னாரின் உச்ச ஏல கேள்வி தொகையான ரூ.1,57,600/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி பெறலாம்.

**அலுவலக குறிப்பு :**

பொருளில் காணும் விபரப்படி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் தொலைக் காட்சி பெட்டி 4 எண்ணங்களில் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 03.10.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இருவர் மட்டும் கலந்து கொண்டனர் திரு.மா.பாலசுப்பிரமணியன் என்பவர் ரூ.1,57,600/- என உச்ச கேள்வியாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.7,600/- கூடுதலாக கேட்டுள்ளதால் திரு.மா.பாலசுப்பிரமணியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.1,57,600/-ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: மே.பா.அ1/10814/2022)**

**தீர்மானம் எண்: 175 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

21. திருநெல்வேலி மாநகராட்சியில் 22 எண்ணம் துவக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் 4 எண்ணம் , உயர்நிலைப்பள்ளி 1 எண்ணம் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 5 எண்ணம் ஆக மொத்தம் 32 எண்ணம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் கீழ்காணும் பள்ளிகளில் மராமத்து பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் பழுதடைந்த நிலையிலும், சமையலறை பழுதாகி இருப்பதாலும், பள்ளிக்குழந்தைகளின் நலன் கருதி மேற்படி பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், கழிப்பிடங்கள் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளின் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | மண்டலம் | பள்ளிகளின் விபரம் | மேற்கொள்ளப்பட இருக்கும் பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | மேலப்பாளையம் | காயிதே மில்லத் ஆரம்ப பள்ளி, (வார்டு எண் : 45) | கழிப்பிட வசதி, வர்ணம் பூசும் பணிகள் மற்றும் சுற்றுச்சுவர் பழுதுபார்த்தல். | 7.10 |
| 2 | மேலப்பாளையம் | கருங்குளம் மாநகராட்சி துவக்கப்பள்ளி (வார்டு எண் : 48) | சிறுநீர் கழிப்பிடத்தில் G.I. சீட் கூரை அமைத்தல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் செய்தல். | 12.80 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மேலப்பாளையம் | பெருமாள்புரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி (வார்டு எண் : 42) | மேஜை, நாற்காலி போன்ற தளவாட சாமான்கள் விநியோகம் செய்தல், வர்ணம் பூசும் பணிகள் செய்தல் மற்றும் சிறுநீர் கழிப்பிடத்தில் G.I. சீட் கூரை அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல். | 12.00 |
| 4 | மேலப்பாளையம் | ஹாமீம்புரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி (வார்டு எண் : 50) | கூடுதல் கழிப்பறை கட்டிடம் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 17.90 |
| 5 | மேலப்பாளையம் | காயிதே மில்லத் மேல்நிலைப் பள்ளி (வார்டு எண் : 45) | கதவு, ஜன்னல், மற்றும் கழிப்பிடம் பழுதுபார்த்தல், வர்ணம் பூசும் பணிகள், சிசிடிவி கேமரா வசதி செய்து கொடுத்தல். | 23.20 |
| 6 | தச்சநல்லூர் | வண்ணார்பேட்டை மாநகராட்சி புதிய நடுநிலைப்பள்ளி (வார்டு எண் : 11) | பள்ளி வளாகத்தில் கூடுதலாக தெற்கு மற்றும் கிழக்கு பகுதியில் வகுப்பறை கட்டிடங்கள் அமைத்தல், ஆசிரியர் அறை மற்றும் கழிப்பிட கட்டிடம் அமைத்தல். | 97.50 |
| 7 | தச்சநல்லூர் | அழகநேரி மாநகராட்சி தொடக்கப்பள்ளி (வார்டு எண் : 2) | புதிதாக கழிப்பிடம் கட்டுதல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல். | 12.10 |
| 8 | தச்சநல்லூர் | கொக்கிரகுளம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி (வார்டு எண் : 31) | புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டுதல் மற்றும் கழிப்பிடம் அமைத்தல். | 95.50 |
| 9 | பாளையங்கோட்டை | பெருமாள் சன்னதி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி (வார்டு எண் : 33) | கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல். | 75.50 |
| 10 | பாளையங்கோட்டை | மாநகராட்சி ஆயுதப்படை துவக்கப்பள்ளி (வார்டு எண் : 39) | மின்வசதி மற்றும் கழிப்பிட வசதி பணிகள் செய்தல் | 3.50 |
| 11 | பாளையங்கோட்டை | மனகாவலம்பிள்ளை மருத்துவமனை சாலையில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளி (வார்டு எண் : 34) | புதிதாக கழிப்பிடம் அமைத்தல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல். | 9.80 |
| 12 | பாளையங்கோட்டை | வடக்குப்படை மாநகராட்சி துவக்கப்பள்ளி (வார்டு எண் : 9) | சமையலறை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | 8.10 |
| 13 | திருநெல்வேலி | மாநகராட்சி கல்லணை நடுநிலைப்பள்ளி , டவுண் (வார்டு எண் : 23) | தரைத் தளத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | 81.25 |

மேற்குறிப்பிட்ட 13 எண்ணம் பள்ளிகளில் பள்ளிக்குழந்தைகளின் நலன் கருதி, அத்தியாவசியமான பணியான கழிப்பிட வசதி, மின்வசதி, கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் போன்ற அத்தியாவசியமான பணிகளைஅவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் அதன் எதிரே குறிப்பிட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், அதற்காகும் செலவினத்

தொகையினை மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 13 எண்ணம் மாநகராட்சி பள்ளிகளில் பள்ளிக் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு அத்தியாவசியமான பணியான கழிப்பிட வசதி, மின்வசதி, கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகளை மேற்கொள்ளவும், அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், அதற்காகும் செலவினத் தொகையினை மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(மதிப்பீடு எண்.84/2022-23(மே.வா.)

**தீர்மானம் எண்: 176 பொருளில் வ.எண்13 இல் வார்டு எண்.23 என தவறுதலாக உள்ளதை வார்டு எண். 27 என திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---